# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017

## வரலாறு – I

சுட்டெண் :- ..........................................

**தரம் : - 11**

**நேரம் :- 1. 00 மணித்தியாலம்**

- **கவனிக்க.**

❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.

❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

❖ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை [ X ] இடுக.

❖ அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

### பகுதி – I

**(01)** இலங்கையின் வரலாறு தொடர்பாக கி. பி 4 ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட மிகப் பழமையான உள்நாட்டு இலக்கிய மூலாதாரமான நூலைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.

(1) மகாவம்சம் (2) தீபவம்சம்
(3) சூளவம்சம் (4) தாதுவம்சம்

**(02)** இலங்கைக்கு வருகை தந்து தமது நேரடி அனுபவங்கள் மூலம் இலங்கை தொடர்பான வரலாற்றுத் தகவல்களை முன்வைத்த வெளிநாட்டு அறிஞர்கள் உள்ளடங்கிய விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

(1) ஹியுங்சாங்பிக்கு, பர்னாவோ குவேரோஸ் (2) ரிபைரோ, பிளினி
(3) இபன்பதூதா, பிலிப்ஸ்டியஸ் (4) றொபட் நொக்ஸ், மெகஸ்தனிஸ்

**(03)** புராதன இலங்கையில் பிரதேச எல்லைகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சின்னங்களைப் பின்வருவனவற்றில் இருந்து இனம் காண்க.

(1) விசிறி, வில், அம்பு, மாட்டுக்கொம்பு, பாதச்சுவடு
(2) வில், ஆலவட்டம், சாமரை, பாதச்சுவடு, வாள்
(3) சூரியன், சந்திரன், சாமரை, ஆலவட்டம், வாள்
(4) விசிறி, சூரியன், அம்பு, சாமரை, ஆலவட்டம்

**(04)** வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்களின் இயல்பினைத் தீர்மானித்த பிரதான காரணி

(1) வெப்பநிலை (2) மழைவீழ்ச்சி (3) மண் (4) உணவு

**(05)** சடலங்களை எரித்துப் பெறப்பட்ட அஸ்தி மட்பாண்டங்களில் பாதுகாத்து வைக்கப்பட்ட மயானங்கள் கண்டறியப்பட்ட இடங்களில் ஒன்றினைப் பின்வரும் விடைகளில் இருந்து தெரிவு செய்க.

(1) உடரஞ்சாமடம (2) ஹல்துமுல்ல (3) யட்டிகல்பொத்த (4) பெரகல

**(06)** கி. மு 250 ஆம் ஆண்டிற்குரிய தம்புள்ளைக்கு அருகில் உள்ள கண்டலம பிரதேசத்தில் கொத்கல்கந்தையில் காணப்பட்ட கல்வெட்டில் பிக்குகளுக்குத் தானமளித்த பருமகருக்கு வழங்கப்பட்ட பதவிப் பெயர் என்ன?

(1) கஹபதி (2) போசனி அரசன் (3) அடிக (4) தொட்டபோஜக

**(07)** அரசனாகப் பதவி ஏற்று தனது பத்தாவது ஆட்சி வருடத்தில் கிராமங்களுக்கு எல்லைகளை நிர்ணயித்த அநுராதபுர ஆட்சியாளன்

(1) பண்டுகாபயன் (2) வசபன்
(3) தேவநம்பியதீசன் (4) துட்டகைமுனு

**(08)** புராதன காலத்திலிருந்தே சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளில் இலங்கை சிறப்பிடம் பெற்று விளங்கியதில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணி

(1) இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களின் நட்புறவான நடவடிக்கைகள்
(2) இலங்கையில் காணப்பட்ட வர்த்தகப் பொருட்கள்
(3) இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருந்தமை
(4) இலங்கையின் மேற்கு, கிழக்கு கரையோரங்களில் காணப்பட்ட சிறிய துறைமுகங்கள்

**(09)** இலங்கையில் கி.பி 5 ஆம் நூற்றாண்டில் கட்டியெழுப்பப்பட்ட சிறந்த "நகர நிர்மாணத்" திற்கு சான்றாக விளங்கும் நகரம்

(1) அநுராதபுரம் (2) பொலன்னறுவை (3) மாகம (4) சிகிரியா

**(10)** புராதன காலத்தில் இலங்கையில் வைத்தியத்துறை சிறப்பாகக் காணப்பட்டது என்பதற்கான சான்றாதாரங்கள் கண்டறியப்பட்ட அகழ்வு

(1) ஜேத்தவனராமய அகழ்வு (2) ஆலாஹன பிரிவேனா அகழ்வு
(3) அபயகிரி விகாரை அகழ்வு (4) மகாவிகாரை அகழ்வு

**(11)** பன்னிரண்டு மாதங்களைக் குறிப்பதற்குக் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்ட சொல்

(1) மொஹத்த (2) அவுருது (3) ஹவஜர (4) தீதிய

**(12)** 1 ஆம் விஜயபாகு மன்னன் பகைவர்களால் துன்பப்பட்ட போது அவருக்கு உதவிய தண்டநாயக்கன்

(1) கித்தநகரகிரி (2) ஜகத்விஜய
(3) லங்காபுர (4) சித்தாரும்பி புத்தநாயக்க

**(13)** புராதன இலங்கையில் நீதிமன்றத் தொகுதிகள் சிறப்பாக இயங்கின என்பதற்கு ஆதாரமான சித்துல்பவ்வ கல்வெட்டினைப் பொறிப்பித்த மன்னன்

(1) முதலாம் கஜபாகு (2) முதலாம் அக்போ
(3) நான்காம் மகிந்தன் (4) மானவர்மன்

**(14)** வடஇந்திய வர்த்தகர்களால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட "ஹஸ்ஸபு" என்னும் நாணயத்தினைச் செய்வதற்குப் பயன்படுத்திய உலோகம்

(1) தங்கம் (2) வெள்ளி (3) செப்பு (4) தகரம்

**(15)** தானியங்களை வறுத்து அதன் மூலம் செய்யப்பட்ட உணவிற்குப் பழைய நூல்களில் வழங்கப்பட்ட பெயர்

(1) திலசங்குலிக்கா (2) எம்புல்ஹம்பு
(3) அச்சுணு (4) அபுஹம்புகாடி

**(16)** மகாவிகாரையில் தங்கியிருந்து திரிபீடக நூலுக்கு மேலதிக விளக்கமாக அட்டுவாக்களை எழுதிய தேரர்

(1) மகாநாமதேரர் (2) வாரியப்பொல ஸ்ரீ சுமங்கலதேரர்
(3) வீதாகம மஹாஸ்தவீர தேரர் (4) புத்தகோசதேரர்

**(17)** பெரிமியன் குளக் கல்வெட்டினை உருவாக்கிய மன்னன்

(1) வலகம்பா (2) மானவர்மன்
(3) கீர்த்தி ஸ்ரீ மேவன் (4) வசபன்

**(18)** புராதன கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ள "ரூப்பதக்க" என்ற அதிகாரியின் பணி
(1) கால்வாய்களைப் புனரமைப்புச் செய்வது
(2) வரி அறவிடுவது
(3) நாணயங்களை வெளியிடுவது
(4) சூழலைப் பாதுகாப்பது

**(19)** மேல்வரும் கூற்றுக்களை அவதானிக்க.

- புத்தர் சிலைகளிலும் சமயக் கட்டடங்களிலும் தென்கிழக்காசிய நாடுகளின் கலைப் பண்புகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டமை
- அரசியலில் அதிகாரப் பரவலாக்கம் காணப்பட்டது

மேற்படி கூற்றுக்களுடன் தொடர்புடைய நகரங்களின் சோடியைத் தெரிவு செய்க.
(1) அநுராதபுரம், யாப்பகுவா
(2) பொலன்னறுவை, தம்பதெனியா
(3) அநுராதபுரம், தம்பதெனியா
(4) குருநாகல், யாப்பகூவா

**(20)** மேல்வரும் வரலாற்று நிகழ்வுகளைக் கவனிக்க.
(D) - அரசமாளிகையில் ஏற்பட்ட இராணுவ சதியில் 4 ஆம் விஜயபாகு (போசத்) கொலை செய்யப்படல்
(B) - கோட்டை இராச்சியம் மூன்று இராசதானிகளாகப் பிரிக்கப்படல்
(C) - கலிங்கமாகனிடமிருந்து இராசரட்டை கைப்பற்றப்பட்டமை
(A) - செங்கோ தளபதி வீர அழகேஸ்வரனைக் கைதுசெய்து சீனாவிற்குக் கொண்டு சென்றமை
மேற்குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வுகளைக் கால ரீதியான ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் விடையைத் தெரிக.
(1) CDAB (2) CADB (3) DCBA (4) ACDB

**(21)** 1 ஆம் இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு உதவிய கண்டிப் பிரதானி
(1) பல்லேகம்பா பிரதானி (2) உடகம்பா பிரதானி
(3) வீரசுந்தர பண்டார (4) கெப்பட்டிப்பொலதிசாவ

**(22)** கண்டி இராச்சியம் பிரித்தானியருக்கு அடிமைப்பட்டமையை உத்தியோகபூர்வமாக ஒப்புக் கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணம்
(1) மல்வானை ஒப்பந்தம்
(2) ஜோன் டொயிலியின் நடவடிக்கைகள்
(3) டி. மியூறனின் பரிந்துரைகள்
(4) கண்டி உடன்படிக்கை

- **மேல்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 23 ஆம் 24 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

| **ஆண்டுகள்** | **அரசியல் யாப்பு சீர்திருத்தம்** | **பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட பெயர்கள்** |
|---|---|---|
| A – 1833 | D – 1ம் குடியரசு யாப்பு | G – சட்டவாக்கக்கழகம் |
| B – 1931 | E – கோல்புறூக் | H – அரசுக்கழகம் |
| C – 1972 | F – டொனமூர் | I – தேசிய அரசுப்பேரவை |

**(23)** பாராளுமன்றம் என்று அழைக்கப்பட்ட சட்ட சபையை தேசிய அரசுப் பேரவை என மாற்றிய அரசியல் யாப்பு சீர்திருத்தத்தையும், அது நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டினையும் தரும் விடை யாது?

(1) D, C (2) F, A (3) E, B (4) D, B

**(24)** கி.பி *1931* இல் அமுல்படுத்தப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தினையும் அதில் சட்டசபைக்கு வழங்கப்பட்ட பெயரையும் தரும் விடையைத் தெரிக.

(1) E, G (2) D, J (3) F, H (4) E, H

**(25)** கி.பி *1562* இல் முல்லேரியாவில் நடைபெற்ற யுத்தத்தினை வழிநடத்திய போர்த்துக்கேயத் தளபதி

(1) லோறன்ஸ் த அல்மேதா
(2) அபோன்சு பெரேயிரா த லசார்தா
(3) கொன்ஸ்தாந்தினு த சா
(4) பேரோ லொபேஸ் த சூ சா

**(26)** கி.பி *1638, 1766* ஆகிய ஆண்டுகளில் ஒல்லாந்தருடன் உடன்படிக்கை செய்து கொண்ட கண்டி மன்னர்களைத் தரும் விடை முறையே

(1) செனரத், 2ம் விமலதர்மசூரியன்
(2) ஸ்ரீ நரேந்திரசிங்கன், ஸ்ரீ விஜயராஜசிங்கன்
(3) இரண்டாம் இராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன்
(4) 1ம் விமலதர்ம சூரியன், 2ம் விமலதர்ம சூரியன்

- **கீழே A தொடக்கம் E வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 27 ஆம் 28 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

(D) - நிர்வாகக் குழுமுறை ஏற்படுத்தப்பட்டது
(B) - சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை
(C) - நாடு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்படல்
(A) - வரையறுக்கப்பட்ட வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டமை
(E) - அரசின் வர்த்தக ஏகபோகமுறைமை அகற்றப்படல்

**(27)** கோல்புறூக் அரசியல் யாப்புச் சீர்திருத்தம், குறுமக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்களை ஒழுங்கு முறையில் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

(1) C, E, A (2) D, B, E (3) C, B, A (4) E, B, D

**(28)** டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்துடன் தொடர்புடைய விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A, E (2) B, D (3) C, B (4) B, E

**(29)** கண்டி இராச்சியத்தில் போக்குவரத்துக் கடமைகளுக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி

(1) குருவே முகாந்திரம்
(2) ஹெந்த முகாந்திரம்
(3) படஹெல முகாந்திரம்
(4) மடிகே முகாந்திரம்

**(30)** இலங்கையில் பெயரளவு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை அறிமுகப்படுத்திய அரசியல் யாப்புச் சீர்திருத்தம் எது?

(1) டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(2) முதலாம் குடியரசு யாப்புச் சீர்திருத்தம்
(3) இரண்டாம் குடியரசு யாப்புச் சீர்திருத்தம்
(4) சோல்பரி குடியரசு யாப்புச் சீர்திருத்தம்

**(31)** கி.பி *1818*, கி.பி *1848* இல் இலங்கையில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய தகவல்கள் கீழே A, B, C, D, E எனத் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே *1848* சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய தகவல்கள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிந்தெடுக்க.

(A) - புதிய நீதிமன்றமுறை

(B) - ஹஜ்ஜி மரிக்கார் வெல்லசே முகாந்திரமாக நியமிக்கப்பட்டமை

(C) - ஆளுனர் டொரிங்டனால் விதிக்கப்பட்ட புதிய வரிகள்

(D) - மொல்லிகொட அதிகாரத்தின் செயல்கள்

(E) - விவசாய நிலங்கள் பறிக்கப்பட்டமை

*(1)* A, C, E

*(2)* A, B, D

*(3)* B, D, E

*(4)* E, C, B

**(32)** ''பராபவ'' என்ற சிங்கள நாடகத்தின் மையப்பொருள்

*(1)* பௌத்த மத மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது

*(2)* கல்வியின் அவசியத்தை விளக்குவது

*(3)* மதுபாவனையின் தீமைகளை விளக்குவது

*(4)* நெற்பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பது

**(33)** மறுமலர்ச்சிக் காலத்தில் அரசியலில் ஏற்பட்ட முக்கிய மாற்றம் யாது?

*(1)* நிலமானியமுறை தோற்றம் பெற்றிருந்தது

*(2)* பிரதேச ஆட்சியாளர்களிடம் வழங்கப்பட்டிருந்தது

*(3)* பிரபுக்கள் அதிக அதிகாரமுடையவர்களாக இருந்தனர்

*(4)* தேசிய அரசுகள் தோன்றின

**(34)** கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட மாற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(A) - பணக்கார வர்க்கம் தோற்றம் பெற்றது

(B) - ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதாரமுறை தோற்றம் பெற்றது

(C) - சேரிப்புறங்கள் உருவாக்கப்பட்டன

(D) - தொழிலாளர் உரிமைப் போராட்டங்கள் ஆரம்பமானது

(E) - சிறுவர் தொழிலாளர்கள் உருவாகினர்

மேலே தரப்பட்டவற்றுள் கைத்தொழில் புரட்சியினால் சமூகத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களுடன் தொடர்புடைய விடையைத் தெரிவு செய்க.

*(1)* A, D

*(2)* C, E

*(3)* C, D

*(4)* A, E

**(35)** நில அடைப்பு இயக்கம் எனப்படுவது

*(1)* விவசாயிகளின் சிறிய நிலங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பெரிய விவசாயப் பண்ணைகள் உருவாக்கப்பட்டமை

*(2)* கிராமிய விவசாயிகள் பயிர்செய்வதற்காகக் காணிகள் வழங்கப்பட்டமை

*(3)* கிராமிய விவசாயிகள் நகரம் நோக்கி இடம் பெயர்ந்தமை

*(4)* பிரபுக்களின் நிலங்களில் கிராமிய விவசாயிகள் வேலை செய்தமை

- **கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு 36 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**

(A) - 1. கரிபியன் தீவுகள் கண்டுபிடிப்பு
2. கிறிஸ்தோபர் கொலம்பஸ்

(B) - 1. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்
2. ரஷ்யப்புரட்சி

(C) - 1. பஸ்டீல் சிறைச்சாலை உடைப்பு
2. பிரான்சியப் புரட்சி

(D) - 1. 2ம் உலகயுத்தம்
2. ஐக்கிய நாடுகள் சபை

**(36)** இரண்டாவதின் நடவடிக்கை காரணமாக முதலாவது ஏற்பட்டது
(1) D (2) B (3) C (4) A

**(37)** முதலாவதன் காரணமாக இரண்டாவது பலமடைவதனைக் காட்டும் விடைச்சோடி
(1) C (2) A (3) D (4) B

**(38)** முதலாவதற்கும் இரண்டாவதற்கும் இடையில் எதுவித தொடர்பினையும் தராத விடைச்சோடி
(1) A (2) B (3) C (4) D

**(39)** ஐக்கிய அமெரிக்கா முதலாம் உலகயுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்டமைக்கான முக்கிய காரணம்
(1) ஐரோப்பிய வர்த்தகம் இல்லாமல் போகும் என ஐக்கிய அமெரிக்கா கருதியமை
(2) பேர்ள் துறைமுகத்தினை ஜப்பான் தாக்கியமை
(3) ஜேர்மன் கடற்படையினால் தனது கடற்படைத்தளம் தாக்கப்படும் என ஐக்கிய அமெரிக்கா கருதியமை
(4) அமெரிக்கர்கள் பயணம் செய்த லூசிதானியக் கப்பலை ஜேர்மனின் நீர்மூழ்கிக் கப்பல் தாக்கியமை

**(40)** ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்புச் சபையிலுள்ள நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள விசேடமான அதிகாரம் என்ன?
(1) இரத்துச் செய்யும் அதிகாரம்
(2) பொதுச் செயலாளரை நியமிக்கும் அதிகாரம்
(3) பிரச்சனைக்குரிய நாடுகளுக்கு ஆயுதப்படையை அனுப்பும் அதிகாரம்
(4) இயற்கை அனர்த்தத்தின் போது மனிதாபிமான உதவிகளை வழங்கும் அதிகாரம்

(40 x 2 = 80 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்**

**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017**

**வரலாறு – II**

| சுட்டெண் :- ......................................... | **தரம் : - 11** | **நேரம் :- 3. 00 மணித்தியாலம்** |
|---|---|---|

- **கவனிக்க.**
- **பகுதி I ன் 1ம் வினா கட்டாயமானது.**
- **பகுதி II இல் நான்கு வினாக்களுக்கும் பகுதி III இல் ஒரு வினாவிற்கும் விடை தருக.**
- **எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி – I

***(01)*** (அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) கலாஓயா, மாதுறுஓயா, ஜம்புக்கோளப்பட்டினம், கற்பிட்டி, மாகம, கம்பளை, கோகன்னதித்த, ஹல்துமுல்ல, குருளுவாவி, வல்லிபுரம், திஸ்ஸவாவி, செங்கடகல

*(12 புள்ளிகள்)*

(ii) செங்கடல், சுமாத்திராதீவு, உரோம், கோவா, எதென்ஸ், மத்தியதரைக்கடல்

*(6 புள்ளிகள்)*

(ஆ) (i) மேல்வரும் A, B, C, D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிட்டுள்ளபடி இலங்கையை ஆட்சி செய்த முதல் மன்னன்

B - 6ம் புவனேகபாகு மன்னனுக்கு எதிராக பஸ்துன்கோறளைப் பகுதியில் கிளர்ச்சியில் ஈடுபட்டவருக்கு (சிங்களசங்கய) மன்னன் மன்னிப்பு வழங்கினான். மன்னிப்புப் பெற்றவரின் பெயர்

C - *1883* இல் எகிப்து நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டு, இலங்கைக்கு வந்து இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்திற்குத் துணையாக செயற்பட்டவர்

D - சமூக ஒப்பந்தம் என்னும் நூலின் ஆசிரியர்

*(4 புள்ளிகள்)*

(ii) இங்கு A, B ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.



(A)

a) படம் A யைப் பெயரிடுக.

b) இது அமைக்கப்பட்ட இராசதானி?

c) இதனை அமைத்த மன்னன்?

d) இதில் செல்வாக்குச் செலுத்தியிருக்கும் கலைமரபு யாது?

(4 புள்ளிகள்)



(B)

a) படம் B யைப் பெயரிடுக.

b) இதனைப் பொறிப்பித்த மன்னன் யார்?

c) இதில் குறிக்கப்பட்டிருக்கும் விடயங்களில் ஒன்று தருக.

d) இதில் காணப்படும் உருவங்களில் ஒன்றின் பெயரைத் தருக.

(4 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

### பகுதி – II

**(02)** (i) இலங்கையில் அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானங்கள் அகழ்வுகள் மூலம் கண்டறியப்பட்ட இடங்கள் மூன்று தருக.

(3 புள்ளிகள்)

(ii) A, B, C, D எனத் தரப்பட்டுள்ளவை குறிக்கும் விடயங்களுக்கான விடையை அதே ஒழுங்கில் தருக.

A - பரிகித்தகம

B - ஒலகம்

C - வாவிகாம

D - புரம்

(4 புள்ளிகள்)

(iii) வரலாற்றுக் காலத்தில் முக்கியம் பெற்றிருந்த "குடும்பம்" தொடர்பான கருத்துக்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(5 புள்ளிகள்)

(iv) இலங்கையின்
வரலாற்றுக்கு முற்பட்டகாலம்
முன்வரலாற்றுக் காலம்
ஆகிய காலப்பகுதிகளின் வாழ்க்கைமுறை தொடர்பாக மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(6 புள்ளிகள்)

**(03)** (i) கீழே A, B, C எனத் தரப்பட்டவர்களின் பணிகளைத் தருக.

(A) - கஹபதி

(B) - தொட்டபோஜக

(C) - பருமக

*(3 புள்ளிகள்)*

(ii) கீழே அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள மன்னர்களில் இருந்து அநுராதபுரத்தினை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த நான்கு மன்னர்களைத் தெரிவு செய்க.

[ *1ம்* அக்போ, வசபன், *1ம்* பராக்கிரமபாகு, *1ம்* விஜயபாகு, தாதுசேனன், *2ம்* பராக்கிரமபாகு, தேவநம்பியதீசன், *6ம்* பராக்கிரமபாகு ]

*(4 புள்ளிகள்)*

(iii) புராதன கிராமங்களை நிர்வகித்த "கிராமிக" என்ற கிராமத் தலைவனின் பணிகளை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

*(5 புள்ளிகள்)*

(iv) நுண்ணறிவுடன் திட்டமிட்ட முறையில் படையெடுப்பை நடத்தி சோழராட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த 1ம் விஜயபாகு மன்னனின் பணிகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

*(6 புள்ளிகள்)*

**(04)** (i) இலங்கையின் பின்வரும் திசைகளில் அமைந்திருந்த துறைமுகங்கள் ஒவ்வொன்று தருக.

வடக்கு

கிழக்கு

மேற்கு *(3 புள்ளிகள்)*

(ii) இலங்கை புராதன காலத்தில் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்த நான்கு நாடுகளைத் தருக.

*(4 புள்ளிகள்)*

(iii) ஹோபிட்டிகம தூண் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு சந்தை தொடர்பான சட்டதிட்டங்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

*(5 புள்ளிகள்)*

(iv) இலங்கை புராதன காலத்தில் வெளிநாடுகளுடன் வர்த்தகத் தொடர்பினை மேற்கொண்டிருந்தது என்பதற்கான சான்றாதாரங்கள் மூன்று குறிப்பிட்டு விளக்குக.

*(6 புள்ளிகள்)*

**(05)** (i) இலங்கையின் புராதன இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் மூன்று தருக.

*(3 புள்ளிகள்)*

(ii) கீழே A, B, C, D எனத் தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடைகளை அதே ஒழுங்கில் தருக.

(A) - யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான தகவல்களை அறிய உதவும் நூல்களில் ஒன்று

(B) - விஜய சுந்தராமய விகாரையைக் கட்டியவன்

(C) - யாப்பகுவா கோட்டைக்குரிய படிவரிசைத் தூண்களில் செல்வாக்குச் செலுத்திய கலை மரபுகளில் ஒன்று

(D) - நாட்டின் வடமத்திய, கிழக்கு, வடமேல் மாகாணங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்திருந்த ,,வன்னி' சிறிய ஆட்சி அலகுகளை மத்திய அரசுடன் ஒன்றிணைத்த கோட்டை இராட்சிய ஆட்சியாளன்

*(4 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் இரண்டாம் நகராக்ககால பொருளாதார அமைப்புத் தொடர்பாக இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

*(5 புள்ளிகள்)*

(iv) 2ம் பராக்கிரமபாகுவின்

(A) - அரசியல் பணிகள் இரண்டினையும்

(B) - இலக்கியப்பணி ஒன்றினையும் குறிப்பிட்டு விளக்குக.

*(6 புள்ளிகள்)*

**(06)** (i) கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த நாயக்க வம்ச ஆட்சியாளர்கள் மூவரின் பெயர்களைத் தருக.

*(3 புள்ளிகள்)*

(ii) போர்த்துக்கேயருக்கு எதிராக யுத்தம் நடைபெற்ற நான்கு இடங்களைத் தருக.

*(4 புள்ளிகள்)*

(iii) பலம் வாய்ந்ததாக இருந்த கோட்டை இராச்சியம் குறுகிய காலத்தில் போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு உட்பட்டதாக மாற்றமடைந்ததில் செல்வாக்குச் செலுத்திய இரு காரணங்களை விவரிக்க.

*(5 புள்ளிகள்)*

(iv) ஒல்லாந்தர் இலங்கையிலிருந்து பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்வதிலேயே கவனம் செலுத்தினர். இதனை *1638, 1766* ஆகிய ஆண்டுகளின் உடன்படிக்கைகளில் குறிப்பிட்ட ஒவ்வொரு நிபந்தனையை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

*(6 புள்ளிகள்)*

**(07)** (i) கீழே A, B, C எனத் தரப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய பிரித்தானிய ஆளுனர்களின் பெயர்களை அதே ஒழுங்கில் தருக.

(A) - பிரித்தானியரின் கீழ் இருந்த இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை நிர்வகிப்பதற்காக முதன்முதலாக நியமிக்கப்பட்ட ஆளுனர்

(B) - கி.பி *1815* கண்டி உடன்படிக்கையில் கையொப்பமிட்ட பிரித்தானிய ஆளுனர்

(C) - கோப்பிக்கான ஏற்றுமதி வரி குறைக்கப்பட்ட காலத்தில் பதவி வகித்த பிரித்தானிய ஆளுனர்

*(3 புள்ளிகள்)*

(ii) கோல்புறூக் யாப்புச் சீர்திருத்தத்திற்கு ஏற்ப இலங்கையில் ஏற்பட்ட நான்கு மாற்றங்களைக் குறிப்பிடுக.

*(4 புள்ளிகள்)*

(iii) பிரித்தானியரின் ஆட்சி காரணமாக இலங்கையின் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக.

*(5 புள்ளிகள்)*

(iv) கி.பி *1848*இல் பிரித்தானியருக்கு எதிரான கலகம் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

*(6 புள்ளிகள்)*

The National e-learning Portal for The General Education

## பகுதி – III

**(08)** (i) கைத்தொழிற்புரட்சி முதன்முதல் ஏற்பட்ட மூன்று கைத்தொழில்களையும் தருக.

(3 புள்ளிகள்)

(ii) கைத்தொழிற்புரட்சி முதன்முதலில் பிரித்தானியாவில் ஏற்படுவதற்கு பின்னணியாக இருந்த இரு காரணங்களைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(iii) கைத்தொழிற்புரட்சி போக்குவரத்துத்துறையில் ஏற்படுத்திய மாற்றங்களை இரு புதிய கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் விளக்குக.

(5 புள்ளிகள்)

(iv) கைத்தொழிற்புரட்சி காரணமாக ஏற்பட்ட நன்மை, தீமைகள் மூன்று குறிப்பிட்டு உதாரணங்களுடன் விளக்குக.

(6 புள்ளிகள்)

**(09)** (i) முதலாம் உலக யுத்தத்தில் ஈடுபட்ட நேச அணி நாடுகள் இரண்டும் மத்திய ஐரோப்பிய அணி நாடு ஒன்றினையும் தருக.

(3 புள்ளிகள்)

(ii) இரண்டாம் உலக யுத்த காலத்தில் நேச அணி நாடுகளின் தொகுதியில் இருந்த இரு தலைவர்களையும் அச்சு நாடுகள் அணியில் இருந்த இரு தலைவர்களையும் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(iii) முதலாம் உலக யுத்தத்திற்குப் பின் உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமைக்கான இரு காரணங்களைக் குறிப்பிட்டு விவரிக்க.

(5 புள்ளிகள்)

(iv) முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் ஜேர்மனியிலும் இத்தாலியிலும் உருவாகிய இரு அரசியல் கோட்பாடுகளைக் குறிப்பிட்டு, ஜேர்மனியின் நடவடிக்கை இரண்டாம் உலகப் போர் ஏற்படுவதற்கான பின்னணியை ஏற்படுத்தியது என்பதனை இரு விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(6 புள்ளிகள்)



